# பேரிகை

## செய்தி மடல்

அன்பென்று கொட்டு முரசே! - மக்கள்
அத்தனை பேரும் நிகராம்
இன்பங்கள் யாவும் பெருகும்- இங்கு
யாவரும் ஒன்றென்று கொண்டால்

-மகாகவி பாரதியார்

கிளி/கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம் (கிளிநொச்சி மத்திய கல்லூரி) ஆண்டு-2013



## வலயக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

கிளி மத்திய மகா வித்தியாலயத்தின் வெளியீடாகப் பேரிகை எனும் செய்தி மடல் வெளிவருவதையிட்டு நான் மகிழ்வடைகின்றேன்.கிளிநொச்சி மாவட்டத்தின் முன்னணிப் பாடசாலைகளில் ஒன்றான கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம். கல்வி, கலை, கலாசார விளையாட்டுத்துறைகளில் தனது திறன்களை வெளிப்படுத்தி வருவது சிறப்பாகும்.இன்றைய நவீன உலகிற்குப் பொருத்தமான மாணவர் சமூகத்தைக் கட்டியெழுப்புவதில் நவீன தொடர்பூடகக்கற்கையும். பரீட்சயமும் பிரதான பங்கு வகிக்கிறது. அவ்வகையில் பாடசாலையின் செயற்பாடுகளையும் மாணவர்களின் படைப்பாளுமையினையும் பதிவுசெய்யும் வகையில் இச்செய்தி மடல் வெளிவருவது பொருத்தமானதாகும்.பேரிகை செய்தி மடல் தொடர்ந்து வெளிவர வேண்டுமென வாழ்த்துகின்றேன்.



## அதிபரின் வாழ்த்து

இன்றைய உலகின் சவால்களை வெற்றி கொள்வதற கான வீரியத்தை வழங்கும் தன்மையதாக கல்விமுறை மாற்றங்கண்டு வருகிறது. பல்துறை ஆற்றல் உடையவர்களாய் மாணவர்கள் உருப்பெறுவதற்கு அவர்களுக்குரிய களத்தை வழங்க வேண்டிய பொறுப்பு பாடசாலைக்கு உண்டு .அவ்வகையில் மாணவர்க்குச் சுயதேடலை ஊக்கப்படுத்தி, உரிய தேர்ச்சியைப் பெறும் வகையில் கற்றற் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. இதன் ஒரு கட்ட வெளிப்பாடாக மாணவர்களின் படைப்புக்களையும், கல்லூரியின் நிகழ்வுகள் தொடர்பான செய்திகளையும் உள்ளடக்கியதாக "பேரிகை" செய்தி மடல் வெளிவருகின்றமை மகிழ்வைத் தருகின்றது. கல்விப்புலத்தில் தனது அடையாளத்தை நிறுவும் வகையில் பேரிகை செயதி மடல் தொடர்ந்து வெளிவர வேண்டும் என உளமார வாழ்த்துகிறேன்.

## பசுமையான நினைவுகள்

வீரமும் சோகமும் நிறைந்த தேசத்தின் வரலாற்றில் நமது கல்லூரியும் தனிச்சிறப்பு மிக்கதாக அமைந்துள்ளது. யுத்தத்தின் வடுக்களைத் தன்னகத்தே கொண்டு மீண்டும் புதுப்பொலிவுடன் 85 ஆவது அகவையில் தேசிய பாடசாலையாய் தடம்பதிக்கும் எமது கல்லூரிக்கு இதயம் கனிந்த வாழ்த்துச் சாரலினை அள்ளித்தூவுகின்றோம். எனது கல்லூரிக் காலம் தொடங்கியது இரண்டாயிரத்து ஓராம் ஆண்டு.... இந்தவேளையில், நமது பாடசாலையுடன் வாழ்ந்து கடந்து சென்ற அந்தக் காலத்தினை ஒரு கணம் மீட்டிப்பார்க்கின்றேன்.

பாடசாலை என்னும் ஆலயம் புறப்பட்டபோது பெற்றோரின் கைகளை இறுகப்பற்றிக் கொண்டு பாடசாலை வாயிலில் முதல் அடியினை எடுத்து வைத்தபோது கண்ணில் பூத்த கண்ணீர்த் துளி, திரும்பும்திசை எங்கும் புதிய முகங்கள், ஒரேவித ஆடைகள், வித்தியாசமான செயற்பாடுகள், யுத்தவடுக்களுடன் திடமாக நிலைத்திருந்த இரண்டாம் மாடிக் கட்டடம் எல்லாமே எம்மை இன்முகத்தோடு வரவேற்பது போன்ற உணர்வு.

பெற்றோரின் கைகளிலிருந்து அன்போடு எம்மைப் பற்றிக்கொண்ட ஆசிரியர்கள், இனிய நண்பர்கள் என வாழ்வின் இறுதிவரை தொடரும் அப்பிணைப்பு என்றும் மகிழ்வானவை. கல்வி, கலை, விளையாட்டு எனப்பல நெருக்கடிகளுக்கு மத்தியில் கற்ற அந்த நினைவுகள் உள்ளத்தை நிறைக்கின்றன. அதேவேளை இப்படித் தொடர்ந்த எமது வாழ்க்கையில் பயணித்து மறைந்துபோன உறவுகளை எண்ண வேதனை மிகுகிறது. கல்லூரிக் காலத்தில் மறக்க முடியாதவகையில் எத்தனையோ நாட்கள் இருந்தாலும் பத்து ஆண்டுகளுக்கு முன்பு (2003 ஆம்ஆண்டு) எமது பாடசாலையின் 75 ஆவது அகவையை முன்னிட்டு நடைபெற்ற பவளவிழா நிகழ்வு மிகப்பெரும் நிகழ்வாக அமைந்தது. பாடசாலையின் பெயரினது அர்த்தத்தை அனைவருக்கும் புரியவைக்கும் வகையில் கம்பீரமாக நிமிர்ந்து நின்ற பிரதான மண்டபத்தில் இயற்கை அலங்கரிப்புடன் நிகழ்வுகள் அரங்கேறின. இப்படிப் பல நிகழ்வுகள்...

பிரச்சினைகளைச் சந்தித்து கல்வி கற்று வந்த எம்மை யுத்தம் விழுங்கத் தொடங்கியது. எமது சொத்துக்களையும் உறவுகளையும் இழந்து இன்று மிஞ்சிய எமது உயிருடன் சொந்த மண்ணுக்கும், எமது பாடசாலைக்கும் திரும்பியமை ஆறுதலாக உள்ளது. இன்று எமது பகுதியில் மின்சாரம், வீதி, புகையிரதம் என அபிவிருத்தி சார்ந்த செயற்பாடுகள் நடந்து வருகின்றன. இன்று கல்லூரி 85 ஆவது அகவையில்.... காலம் எவ்வளவு விரைவாக ஓடுகின்றது. எத்தனை மாற்றங்கள் .அன்று புழுதி வீதியில் ஓடிப்பிடித்து கால் நடையாக வந்த நினைவுகள் இன்றும் பசுமையாக உள்ளன. உலகில் மாறாதது மாற்றம் மட்டுமல்ல பசுமையான நினைவுகளும் தான் என்பதைப் புரிந்துகொள்ள முடிகின்றது.



**க.பிருந்தாவன்**
தரம் - 13 (கலை)



## கல்லூரி அன்னையே

ஊருக்குள் முதல் முதலாய்
உன்னை அழைத்தபோது
உறங்காமல் விழித்திருந்து
எம்மை வளர்த்த அன்னையே!

அகவை எண்பத்தைந்தைத் தாண்டிய போதும்
என்றும் இளமையுடன் திகழ்பவளே!
காலக் கலைகளில் சிறந்து விளங்கும்
காவியம் படைத்தார்கள் உன் மடியில்

அறிவு தன்னில் ஊற்றெடுத்து
அவனியிலே வாழ வழிகாட்டி
நிமிர்ந்துள்ள அன்னையே!

புதுப்பொலிவுடன் திகழ்ந்து
ஆயிரம் தலைமுறை இங்கே உயர
என்றும் இனிதே வாழியவே!

**கிதுஷனா சிவராஜா**
2015 தொழில்நுட்பப் பிரிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விச் சுற்றுலா அனுபவப் பகிர்வு



**23.06.2013** அன்று மாலை4.30 மணியளவில் புறப்பட்ட எங்களது கல்விச் சுற்றுலாவிற்கான பேருந்து முதலில் வவுனியாவின் ஊடாக மட்டக்களப்பினை இரவு 11.30 மணியளவில் சென்றடைந்தது. அங்கு ஒரு பாடசாலையில் தரித்து நின்று மீதி இரவுப் பொழுதைக் கழித்துவிட்டு காலையில் 6.30 மணியளவில் புறப்பட்டுச் சென்றோம். முதலில் வாழைச்சேனைக் கடதாசித் தொழிற்சாலையில் மேலதிகாரிகளின் அனுமதியுடன் தொழிற் சாலையினுள்ளே சென்று அங்கு இயந்திரங்களின் தொழிற்பாடு, தொழிலாளிகளின் அயராத உழைப்பு, தொழிற்பிரிப்பு, கடதாசி உருவாக்கும் முறை அதற்கு நிறமூட்டும் முறை என்பவற்றைக் கண்டுகொண்டோம்.

பின்னர் மட்டக்களப்பின் தமிழ் மணம் கமழும் சைவ ஆலயங்கள் பலவற்றைத் தரிசிக்கச் சென்றோம். அந்தவகையில் முதலில் மட்டக்களப்பு ஆஞ்சநேயர் கோவில் குறிப்பிடத்தக்கது. சுற்றும் மணல் சூழ்ந்து பூஞ்சோலைகளால் சூழப்பட்டுக் காணப்படும் இந்தக்கோவிலில் ஒருமடம் பரிபாலனசபையினால் அமைக்கப்பட்டுள்ளது. தமிழர் தம் பாரம்பரியத்தைப் பேணிக்காக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ள இக்கோவில்கள் வரலாற்றுப் பழமைமிக்கவையாகும்.

அடுத்து வரலாற்றில் கால்பதித்த ஆலயமான கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்திற்குச் சென்றோம். அங்கு தலவிருட்சம், மூர்த்தி என்பனவற்றைப்பற்றி அவ்வாலயப் பூசகர் ஒருவரிடம் விளக்கம் கேட்டோம். பழமை வாய்ந்த இந்தக் கோவிலானது பல்வேறுபட்ட பிரச்சினைகளையும் சந்தித்துவந்துள்ளதாகக் கூறினார்கள். உயர்ந்த கோபுரம் கொண்டு அமைந்த இவ்வாலயம்மீது இன்றும் கவிஞர்கள் பாட்டிசைக்கின்றனர்.

அடுத்து மட்டக்களப்பில் மாமாங்கப்பிள்ளையார் ஆலயத்தினையும்அதன் வரலாற்றினையும் அறிந்து பின்னர் அவ்வாலய முன்றலில் மணலில் யாவரும் உட்கார்ந்தோம். அப்போதுதான் மட்டக்களப்பிலுள்ள தமிழர் பண்பாடு தொடர்பான பல விடயங்களை அறிந்து கொள்ளக்கூடியதாக இருந்தது.

பின்னர் மட்டக்களப்பின் பாசிக்குடா கடற்கரைக்குச் சென்றோம். அங்கு விளையாடி மகிழ்ந்த பின்னர் மீண்டும் பேருந்தில் புறப்பட்ட நாங்கள் குறிஞ்சிக்குமரன் ஆலயத்திற்குச் சென்றோம். அங்கு குன்றின் மேல் உயரத்தில் குமரனும் அருகே பிள்ளையாரும் வெவ்வேறாக அமர்ந்திருக் கிறார்கள். உயர்மலைச் சிகரம், பச்சை சூழ்ந்தபிர தேசம், உயரத்திலுள்ள நீல வானம் ஆ! அந்த அழகு விளக்கமுடியாததொன்றாகும்.

அந்த அழகைக் கண்டபின்னர் மீண்டும் புறப்பட்டு ஓர் பாடசாலையில் தங்கிநின்றோம். அங்கு இரவைக் கடந்த பின்னர் இரண்டாம் நாள் காலை 6 மணியளவில் காலை உணவிற்குப் பின்னர் ஆரம்பித்த எமது சுற்றுலா இலங்கையின் மத்தியபகுதியை நோக்கி இருந்தது. எங்கும் மலைகள் சூழ்ந்து வளைந்துவளைந்து செல்கின்ற பாதைகள், சென்றுகொண்டிருக்கும் போதே மெய்சிலிர்க்கும் படியான பச்சைக் காடுகள், படிக்கட்டுமுறைப் பயிர்ச்செய்கைகள், நீண்ட அருவிகள், உயரத்தில் இருந்து ஓடி விழுகின்ற சுரங்கம் போல அமைந்த கடைகள் என்று கண்டி மலைநாட்டினை, அதன் அழகினை இரசித்த வண்ணம் சென்றோம். வெப்பத்தை இழந்த உடல் குளிர்ச்சியடைகின்றது. ஒருகணம் மழை, மறுகணம் வெயில் என்று மாறிமாறி நிகழ்கின்றது.

முதலில் கண்டி பேராதனையை மதியம் 2.30 மணியளவில் சென்றடைந்தோம். அங்கு பல்கலைக்கழக உள்ளகவிளையாட்டு அரங்கினையும் நீர்த்தடாகத்தினையும் பார்த்தோம். அங்குள்ள மாணவர்களோடு கலந்து பேசினோம். இனியதொரு அனுபவத்தைப் பெற்றோம். பின்னர் பேராதனைப் பூங்காவிற்கு சென்றோம். அங்கு இயற்கையைப் பாதுகாக்கும் அழகினையும் அங்குள்ள தாவரங்களையும் கண்டு களித்தோம். அழகிய அந்தப் பூங்காவின் உள்ளே சிறு ஒற்றையடிப்பாதைகளும் பெரும் பாதைகளும், தொங்குபாலம் என்பவற்றின் வனப்பும் மேலும் அதிகமாக காணப்பட்டது. இயற்கை அழகு என்றால் அது கண்டியில்தான். அதை நேரடியாகக் கண்டோம் என்பதில் மகிழ்ந்தோம் அளவின்றி......


அடுத்து எமது கல்விச்சுற்றுலாவில் கொழும்பை நோக்கிய பயணம் அங்கே சனநெரி சலையும், போக்குவரத்து இடரினையும், நகரக்கட்டமைப் பினையும், கட்டடங்களையும் பார்வையிட்டவாறே தாமரை போன்ற அமைப்பிலுள்ள அரங்கினைப் பார்க்கச் சென்றிருந்தோம். அது முற்றிலும் உயர் தொழில்நுட்பம் கொண்டு அமைக்கப்பட்டிருந்தது. கண்ணாடியிலான சரிவாக அமைக்கப்பட்டுள்ள இவ்வரங்கம் இலங்கைக்கு பெரும் மெருகூட்டு கின்றது.

அதன் பின்னர் கொழும்பில் அருங்காட்சியகத்தில் அரியவகைப் பூச்சிகளையும், பறவைகளையும், விலங்குகளையும் கண்ணுற்றோம். பல்வேறு வகையான பாறை வகைகளையும் கண்டோம். பின்னர் சர்வதேச விமானத்தளமான கட்டுநாயக்க விமானத் தளத்தினையும் பார்வையிட்டோம். அங்கு மக்களின் ஆரவாரத் தினையும், விமானங்கள் நிறுத்தப்படுவதையும் கண்டோம்.

அதன் பிற்பாடு மதிய உணவையும் முடித்துக் கொண்டு புத்தளம் நோக்கி விரைந்தோம். அங்கு தமிழர்கள் பெரும்பான்மையாகவுள்ள உடப்பு பிரதேசத்தில் உள்ள திரௌபதி அம்மன் ஆலயத்திற்குச் சென்றோம். அங்கு தீ மிதித்தல் வழிபாடு நடைபெற்று வருவது பற்றியும், அவ்வாலய மகிமை பற்றியும், அவ்வாலயம் 2004 இல் சுனாமியால் பாதிக்கப்பட்டு மீண்டும் மக்களின் பேரூக்கத்தினால் எழுச்சி பெற்றமை பற்றியும் மக்கள் விபரித்தனர். இங்கு கண்ணகி வழக்குரை காதை கூறப்பட்டு வருகின்றது. அங்கு கண்ணகிகதை கூத்து வடிவில் ஆடப்படுவதாகவும் குறிப்பிட்டனர். கடற்றொழிலை நம்பிவாழ்கின்ற இப்பிரதேச மக்கள் இவ்வாலய அன்னையினையே தம் அன்னையாக நினைப்பதாகவும் அவள்தான் தங்களை வாழவைப்பதாகவும் கூறினர்.. பின்னர் புத்தளக் கடற்கரையைப் பார்வையிட்டபின்பு, மாலை 6.30 மணியளவில் மீண்டும் பாடசாலையினை நோக்கி வர ஆயத்தமானோம். சிறிதும் மனதில் விருப்பமின்றி யாவற்றையும் கண்டு களித்த இன்பத்துடனும் பேருந்தில் ஏறினோம்.

பா.சிந்துஜா, தரம் -12





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரிகை

செய்தி மடல்

தொலைபேசி : 021 228 5115
மின்னஞ்சல் : info@knlkcc.com
இணையம் : www.knkcci.com

மாணவர்களின் எழுத்தாக்கத்திறனை வெளிப்படுத்தும் களமாகவும், கல்லூரியின் நிகழ்வுகளை ஆவணப்படுத்தும் நோக்குடனும் "பேரிகை" செய்தி மடலின் பிரசவம் நிகழ்கிறது. பேரவலங்களை எதிர்கொண்டு, மீண்டெழுந்து தமது ஆளுமையை வெளிப்படுத்தும் வகையில் மாணவரது கற்றற்செயற்பாடுகள் வீச்சுப் பெறுகின்றமை மகிழ்வுக்குரியது. மாணவர்கள் தம்முள் நிறைந்துள்ள திறன்களை இனங்கண்டு, வெளிப்படுத்தி, வளர்த்தெடுப்பதற்கான களம் பாடசாலையே. இன்றைய அறிவுலகத்தின் சவால்களை எதிர்கொள்ளும் வல்லமை உடையவர்களாய் எமது இளையதலைமுறையை வழிப்படுத்துவதில் அனைவருக்கும் பொறுப்புண்டு.

காலம் அளப்பரிய வல்லமையைத் தன்னகத்தே கொண்டுள்ளது. காலத்தைச் செவ்வையாகக் கணித்து, ஒவ்வொரு கணத்தையும் பொருளுடையதாக்குவது வாழ்க்கையில் உயர்வைத்தரும். சரியான இலக்கு, நேர்த்தியான திட்டமிடல், அர்ப்பணிப்பான உழைப்பு, செயலில் நேர்மை என்பன வெற்றியின் திசையை வெளிச்சமாக்கும். வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் போராட்டத்தை எதிர்கொண்டே நிமிரவேண்டியுள்ளமை இயற்கையின் பொதுவிதி. சோதனைகளை நேர்முகமாக எதிர்கொண்டவர்களே சாதனைகளைப் படைத்துள்ளனர். இவ்வகையில் நாளைய தலைமுறையின் சொத்துகளான மாணவர்கள் தாம் கல்வியில் உயர்வடைய வேண்டும் என்ற உறுதியுடன் செயல்புரிய வேண்டும்; அடையாளங்களை இழக்காது, பண்பாட்டைப் பேணி முன்மாதிரியான மனிதர்களாய் நிமிரவேண்டும். இதுவே அனைவரதும் விருப்பமாகும்.

- இதழாசிரியர்
ந. குகபரன்



## விளையாட்டுப் போட்டிகள்

எல்லே -19 வயது மாவட்டம் 1ம் இடம்
கபடி -17 வயது ஆண் 1ம் இடம்
மென்புந்து - மாவட்டம் 1ம் இடம்
அஞ்சலோட்டம் - 4x400 1ம் இடம்

தேசிய மட்ட மரதன் ஓட்டப்போட்டியில் எமது பாடசாலையைச் சேர்ந்த தே.அன்ரனி டெல்மன் இரண்டாம் இடத்தைப் பெற்றார். இப்போட்டியில் அ.டம்சிகாவும் பங்குபற்றியிருந்தார்.

# நூலகம் ஒரு கோவில்



அறிவு, ஆற்றல் மிக்கது. அறிவுள்ளவரைத் தான் உலகம் போற்றித் துதிக்கும். அறிவற்றவர் அஃறிணை. ஆமாம்! பல வெற்றியாளர்கள் தாங்கள் பெற்ற அறிவாற்றலால்தான் வாழ்க்கையில் தங்களை நிரூபித்துள்ளனர். கல்வியால் அறிவாற்றலைப் பெறமுடியும். கல்வி சிறுவயதில் தொடங்கி இருபதுகளில் வளர்ச்சி அடைகிறது.

வெற்றிக்குத் தேவை நல்ல சிந்தனை. நல்ல சிந்தனைக்கு தேவை நல்ல நூல்கள். நல்ல நூல்கள் சிந்தனையை வளர்க்கும். நல்ல நேரிய வழிகளைக்காட்டும். பட்டறிவாளர்களின் நூல்களைத் தேடித்தேடிக் கற்றுக்கொண்டே இருக்கவேண்டும். "நூலளவே ஆகுமாம் அறிவு " என்பது போல நாம் எவற்றையெல்லாம் வாசித்து அறிகின்றோமோ அங்கே அறிவு தெளிவு பெறுகின்றது.

பார்த்தல், கேட்டல் அறிவைவிட படித்தல் அறிவு சிறந்தது. அதாவது நாள் முழுக்க தொலைக்காட்சியுடன் இருந்தால் பெறும் அறிவினைவிட ஒரு மணித்தியாலம் இருந்து வாசித்துப் பெறுவதால் பல விடயங்களை அறிந்து கொள்ளலாம். வாசிப்பதினூடாக பெறும் அனுபவத்தினைச் சொல்ல வார்த்தைகள் இல்லை.

புத்தகங்களும் ஆசிரியர்களும் கடைசிவரை நல்ல வழிகாட்டிகளாக இருப்பார்கள். அவர்களே நமது நல்ல நண்பர்கள். இளமையில் நமக்கு நிறைய நண்பர்கள் இருக்கலாம். இளமைப்பருவத்திற்குப் பிறகு தனிமையை உணரும்போது புத்தகம் படித்தல்தான் உண்மையான துணையாக, உற்சாகம் அளிப்பதாக இருக்கும்.

ஒருவனைப் பார்த்து "புழு" என்று சொன்னால் அவனுக்குக் கோபம் வரும். புத்தகங்களைத் தொடர்ந்து வாசிப்பவரைப் பார்த்து "புத்தகப்பூச்சி" எனக்கூறிப் பாருங்கள் இரசித்துச் சிரிப்பான். புத்தகப்பைத்தியம் என்றால் புன்னகை பூப்பான். படித்தவர்களுக்கே அதன் சுகம் தெரியும். புத்தகப் பிரியர்களுக்கு புத்தகம் சொர்க்கம். எழுத்துக்கள் அமிர்தம். புத்தகம் நமக்குத் தோழன். புத்தகம் நமது அறிவின் குரு. வாழ்வின் வழிகாட்டி.

"கன்னிமாரா" நூலகத்தில் உள்ள அத்தனை புத்தகங்களையும் பேரறிஞர் அண்ணா படித்து முடித்தவர் என்று சொல்வார்கள். தூக்கு மேடைக்குச் செல்லும் சில நிமிடங்களுக்கு முன்னால்கூட லெனின் எழுதிய "அரசும் புரட்சியும்" என்ற நூலை வாசித்துவிட்டுத்தான் கயிற்றை முத்தமிடப் போனான் இந்திய வீரன் பகத் சிங். ரொபேர்ட் சவுதே என்ற ஆங்கிலக் கவிஞர் தன் கடைசிக்காலம்வரை புத்தகங்களே உண்மையான நண்பர்களாக இருந்தன என்று கூறியுள்ளார். புத்தகம் படிப்பது நல்ல பொழுதுபோக்காகவும் மகிழ்ச்சி தரக்கூடியதாகவும் இருக்கும்.

நல்ல புத்தகத்தை வாசித்தால் மனிதநேயம் வளரும். புதுமையாகச் சிந்திக்க வைக்கும். சமுதாயத்தைப் புரிந்துகொள்ள உதவும். பல்துறை அறிவு வளர்ச்சிக்கும் உதவும். புத்தகம் படிக்கும் பழக்கத்தை மாணவர்கள் சிறுவயதிலிருந்தே கடைப்பிடிக்க வேண்டும். தொடர்ந்து நூல்களை வாசிக்க வேண்டும். எங்கு ஒரு நூலகம் திறக்கப்படுகின்றதோ அங்கு சிறைச்சாலைகள் மூடப்படுகின்றன. புத்தகங்கள் மட்டும் இல்லையென்றால் கடவுள் இல்லை. நீதி சகிக்க முடியாமல் இருக்கும். இதனால்தான் இன்றைய இளைஞர்களில் பலர் நீதி நியாயமற்று வன்முறைகளில் ஈடுபடுகின்றனர். இயற்கை விஞ்ஞானம் செயலிழந்து போய்விடும். வாசிக்கத் தவறினால் தத்துவங்கள் ஊமையாகிவிடும். சகலமும் இருண்டுவிடும்.

புத்தகம் புத்தம்புது உலகைக் காட்டும், பல மொழி இலக்கியங்களில் உள்ள விடயங்களை அறியத் தூண்டும், எழுத்தாளர்களாக, நல்ல விமர்சகர்களாக ,நல்ல ஓவியர்களாக ஆக்கும், அறிவுத்தாகத்தைத் தீர்த்துவைக்கும். நல்ல வாசகனுக்கு நூலகம் ஒரு கோவில்.

ஆக்கம் - செல்லத்துரை கஜானி
2014 A(கலைப்பிரிவு)

## எமக்காக வாடாதே!

ஏன் மேகமே அழுகிறாய் ?
நீயும் யுத்தத்தால் சிதைந்தனையோ?
உன் மீதும் காயங்கள் பட்டனவோ?
புன்னகைக்க வழியில்லையோ?
பகலவன் தந்த ஒளியில்லையோ?
எமக்காக வாடாதே!
உன் நீரால் மலர்கள் சிரிக்க...
உலகமே மலர்ந்து மகிழ...
எப்பொழுதும் துணையிருக்கும்
உன் அன்பைப் போற்றிடுவேன்.



சுகந்தினி தரம் - 12 (கலை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாளைய உலகை ஆளப்போகும்
# நனோ தொழில்நுட்பம் - ஓர் அறிமுகம்

வனாந்தரங்களில் வாழ்விடங்களை அமைத்து வாழ்வாதாரத்திற்காக ஏனைய விலங்குகளோடு போட்டி போட்டுக் கொண்டிருக்கும் மனிதன், பரிணாமப் பாதையில் கொஞ்சம் கொஞ்சமாக நடந்து இன்று பூமிப்பந்தின் அதிசக்தி வாய்ந்த அதீத புத்திசாலித்தனம் கொண்ட உயிரினமாக மிளிர்கின்றான். பரிணாமத்தின் உச்சியில் நின்று இன்று அவன் கோலோச்சுவதற்கு காலத்திற்குக்காலம் அவன் கையில் எடுத்த அவனது தொழில்நுட்பங்களும் பெரும் காரணமாக அமைந்தன. அவனது அறிவு புதிய புதிய கண்டுபிடிப்புக்களுக்கு வழிகோல, அந்த கண்டுபிடிப்புக்கள் அவனது பரிணாமத்தை மேலும் மேலும் விரிவுபடுத்தின.

கற்களில் ஆரம்பித்த மனிதனது ஆதி தொழில் நுட்பம் காலப்பரிணாமத்தில் கனரக இரும்புப் பொறிகளாக மாற்றம் பெற்றபோது அவனது வாழ்வியலும் அதுவரை இல்லாத அளவிற்கு மேம்பட்டது. இப்போது தனது வாழ்வியலின் அடுத்தகட்டப் பயணத்திற்கு அவன் புதிதாக நனோ தொழில்நுட்பத்தைக் கையில் எடுத்திருக்கின்றான். 21ஆம் நூற்றாண்டின் மனித வாழ்வியலுக்குள் நுழைந்திருக்கும் இந்த மிகச்சிறிய நனோ தொழில்நுட்பமே இன்று அறிவியல் உலகில் மிகப்பெரிய அளவிற்கு பேசப்படும் பொருளாக இருக்கின்றது.


## நனோ :-

நனோ தொழில்நுட்பத்தை விளங்கிக்கொள்வதற்கு முதலில் நனோ என்றால் என்ன என்பதை நாம் தெரிந்து கொள்ளவேண்டும். நனோ (nano-n) என்பது ஓர் அளவீட்டு வார்த்தை. கிரேக்கமொழியில் மிகமிகச்சிறியது என்பது பொருள். அதாவது ஆயிரத்தில் ஒரு பங்கை மில்லி (milli – m) என்று குறிப்பிடுவதை போல மில்லியனில் ஒரு பங்கு நனோ எனப்படுகின்றது. இன்னும் தெளிவாக சொல்லுவதானால் 0.000 000 0001 ($10^{-9}$) என்ற அளவு ஒரு நனோவாகும். எமது வெற்றுக்கண்ணுக்குப் புலப்படாத இன்னும் சொல்லப்போனால் நுண்ணங்கிகளையோ, பிற உயிர் கலங்களையோ, அவதானிக்கப் பயன்படும் ஒளி நுணுக்குக்காட்டியினால்கூட பார்க்கமுடியாத பொருட்களை அளக்க இந்த அலகு பயன்படுகின்றது. நமது தலைமுடியின் தடிப்பில் இலட்சத்தில் ஒரு பங்குதான் ஒரு நனோ என்பதில் இருந்து நனோவின் நுண்ணிய பரிணாமத்தை ஒருவர் சுலபத்தில் புரிந்துகொள்ளமுடியும்.

## நனோ தொழில்நுட்பம்

நமது உடல் பல்லாயிரம் மில்லியன் கணக்கான கலங்களால் நேர்த்தியாக அடுக்கப்பட்ட கட்டமைப்பைக் கொண்டது. இந்தக் கலம் ஒவ்வொன்றும் ஒரு நனோ இயந்திரம் தான். ஆனால் இது இயற்கையான உயிருள்ள இயந்திரம். இதேபோன்று நனோ அளவுள்ள பருமனிலுள்ள பாகங்களைக் கொண்டு நமது தேவைகளுக்கேற்ப ஒரு பொருளை செயற்கையாக வடிவமைப்பதை நனோ தொழில்நுட்பம் என்று எளிமையாக வரைவிலக்கணப்படுத்தலாம்.

உண்மையில் இந்த நனோ என்பது மிகமிகச் சிறிய அளவுதான். ஆனால் அணுக்களுடன் ஒப்பிடும்போது மிகப்பெரிய அளவாக காணப்படுகின்றது. பொதுவாக அணுக்களின் விட்டம் 0.1 நனோ மீற்றராகவும் ($10^{-1}$nm) அணுவின் உள்ளே அமைந்திருக்கும் அணுக்கருக்களின் விட்டம் 0.0001 நனோ மீற்றராகவும் ($10^{-4}$nm) உள்ளன. எனவே நனோ தொழில்நுட்பம் என்பதை பொருட்களின்



மூலக்கூறுகள் அளவுள்ள பாகங்களையோ, உறுப்புக்களையோ, கொண்டு கட்டமைக்கும் தொழில்நுட்பம் என்றும் கூறலாம். எனினும் சர்வதேச நியதிகளின்படி நனோ தொழில்நுட்பத்திற்கென சில வரையறைகளுண்டு. இதன்படி ஒரு நனோ மீற்றருக்கும் 100 நனோ மீற்றருக்கும் இடைப்பட்ட நனோ துணிக்கைகளைக் கொண்டு பொருட்களைக் கட்டமைக்கும் தொழில்நுட்பம்தான் நனோ தொழில்நுட்பம். இதில் ஒரு நனோ மீற்றருக்கு குறைவான அல்லது 100 நனோ மீற்றருக்கு அப்பால்பட்ட நனோ துணிக்கைகளோ, கட்டமைப்புகளோ சேர்த்துக்கொள்ளப்படுவதில்லை.

## நனோ தொழில்நுட்பத்தின் தனித்துவம்

நனோ தொழில்நுட்பம் புரிந்துகொள்வதற்கு வசதியாக, எளிமையாக விளக்கப்பட்டபோதும் உண்மையில் அது எளிமையானதோ, சுலபமானதோ அல்ல. ஏனெனில் நனோ துணிக்கைகள் அளவில்தான் மிகமிகச் சிறியனவே தவிர, அசாதாரண ஆற்றலை பெற்றவை.

பொருட்களை மேலும் மேலும் பிரிக்கும்போது அணுக்கள்.. மேலும் பிரிக்கும் போது இலத்திரன், புரோத்திரன், நியூத்திரன் ஆகிய உப துணிக்கைகள் என்று கடந்த ஒரு நிலையில் மேலும் பிரிக்கமுடியாத நிலை தோன்றும். இவ்வாறு தொடர்ந்து பிரிக்கமுடியாத கூறுகள் குவான்டம் (Quantum) அல்லது சக்தி சொட்டு என பௌதீகவியலில் அழைக்கப்படுகின்றது. எடையில்லாத சக்தியின் திரட்சியாக கருதப்படும் இந்த துணிக்கைகள் நனோ அளவு தடிப்புடைய சுவர்களை தாண்டி பயணிக்கக் கூடியவை. இதனால் ஒரு பொருளின் பரிணாமத்தை நனோ அளவாக குறைக்கும்போது அதன் வழமையான மரபார்ந்த பௌதீக, இரசாயன இயல்புகளில் இருந்து வேறுபட்ட நடத்தைகளை வெளிப்படுத்த தொடங்கிவிடுகின்றது. உதாரணத்துக்கு இலத்திரன்களை கடத்தாதென அறியப்பட்ட ஒரு மூலக்கூறு அதன் நனோ அளவில் குறைகடத்தியாக மாறுகின்றது. அத்தோடு நனோ அளவில் மூலக்கூறுகளின் கனவளவைவிட மேற்பரப்பின் அளவு அதிகம் என்பதால் அளவிடமுடியாத செயல்திறனையும், செயல் வேகத்தையும் பெறுகின்றன. உருகுநிலை, கொதிநிலை என்பவற்றிலும் மாற்றம் பெறுகின்றன.

## நனோ தொழில்நுட்பத்தின் பயன்பாடு

புது வரவான நனோ தொழில்நுட்பம் தளர்நடைபோடும் குழந்தைப் பருவத்தில் இருந்தாலும் பௌதீகவியல், இரசாயனவியல், உயிரியல், இலத்திரனியல் என்று விஞ்ஞானத்தின் சகலதுறைகளிலும் கால்பதித்து வருகின்றது. சூரிய காப்பு கண்ணாடி (sun glass) நாக ஒட்சைட்டுகளின் நனோ மூலக்கூறுகளைக் கொண்டு செய்யப்படுகின்றது. இதே இரசாயன பொருட்களின் பெரிய மூலக்கூறுகளை கொண்டு செய்யப்படும் சாதாரண சூரிய கதிர்காப்புக் கண்ணாடிகளிலும் பார்க்க நனோ மூலக்கூறுகளால் செய்யப்படும் கண்ணாடிகள் வினைதிறன்மிக்க பயனையும், நீடித்த பாவனையையும் தரவல்லன.

மழைக்கவசம், விளையாட்டு உடுப்புக்கள் போன்ற உடுப்பு வகைகளும் நனோ தொழில் நுட்பம் மூலமாகச் செய்யப்படுகின்றன. இதனால் இந்த உடுப்புக்கள் இலகுவில் அழுக்குகள் ஒட்டிக் கொள்ளாத தன்மை கொண்டனவையாகவும் அதிக காலம் உழைக்கக் கூடியனவாகவும் கொண்டுள்ளன. விளையாட்டு உபகரணங்களின் தயாரிப்பிலும் நனோ தொழில்நுட்பம் இடம்பிடித்துள்ளது.

மென்பந்து உலகில் 2002ஆம்ஆண்டு இது மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. மென்பந்து மட்டையை உற்பத்திசெய்யும் நிறுவனம் ஒன்று காபன் நனோ குழாயினால் (Carbon nanotube) பாரமற்ற அதேசமயம் உருக்கிலும் பார்க்க பன்மடங்கு வலிமையான மட்டையை அறிமுகப்படுத்தியது. சுற்றுச்சூழலில் வளி, நீர் என்பவற்றை சுத்திகரிப்பதில் நனோ அறிமுகமாகியுள்ளது. எனவே நனோ தொழில் நுட்பம் மக்களுக்கு பெரிதும் பயன்படுகின்றது. இந்த நனோ தொழில்நுட்பம் நாளைய உலகை ஆளப்போகும் என்பதில் எந்தவித ஐயமுமில்லை.

தொகுப்பு: **தட்சாயினி - ரவீந்திரன்**
தரம் - 12 தொழில்நுட்பப் பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்வுகளின் பதிவுகள் சில...

சர்வதேச முதியோர் மற்றும் சிறுவர் தினம் ஒக்டோபர் 01 ஆம் திகதி கல்லூரியில் கொண்டாடப்பட்டது. காலைப் பிரார்த்தனை நிறைவுற்றபின்பு சிறப்புப் பேச்சு நடைபெற்றது. கல்லூரியின் அனைத்து மாணவர்களுக்கும் கொப்பி, எழுதுகருவி மற்றும் இணைப்பு என்பன வழங்கப்பட்டன.





சர்வதேச கைகழுவுதல் தினத்தை முன்னிட்டு Uniliver நிறுவனத்தினரால் இராணுவத்தினரின் ஏற்பாட்டில் கைகழுவுதல் தினம் தொடர்பான விழிப்புணர்வுச் செயற்பாடு கல்லூரியில் முன்னெடுக்கப்பட்டது. பிரதி அதிபர் ஆலாலசுந்தரம் அவர்களின் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மாணவர்களை உற்சாகமூட்டும் வகையில் இலக்கு நோக்கி எறிதல் உள்ளிட்ட போட்டிகள் நடாத்தப்பட்டு பரிசில்கள் வழங்கப்பட்டன.

ஒளிவிழா நிகழ்வானது 14.11.2013 அன்று கிறிஸ்தவமன்றத்தின் ஏற்பாட்டில் சிறப்பாக நடைபெற்றது. 11.00 மணியளவில் ஆரம்பமான நிகழ்வில் மாணவர்களின் வேதகீதங்கள்,பாலன் பிறப்பு நாடகம், பேச்சு, நடன நிகழ்வுகள் சிறப்பாக நிகழ்ந்தன. நத்தார் பாப்பா வருகைதந்து மாணவர்களுக்குப் பரிசில்களை வழங்கினார்.



கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தின் சர்வதேச ஆசிரியர் தின விழா 2013 –அக்டோபர் 05 அன்று வெகுவிமர்சையாகக் கொண்டாடப்பட்டது. ஆசிரியர் தினத்தன்று பாடசாலை விழாக்கோலம் பூண்டிருந்தது. மாணவர்கள் வகுப்பறைகளை அலங்கரித்து சிற்றுண்டி வழங்கி ஆசிரியர்களைக் கௌரவித்தனர். பிரதான மண்டபத்தில் மு.ப 10.30 மணிக்கு அதிபர், பிரதி அதிபர், பிரதம விருந்தினர், சிறப்பு விருந்தினர்கள், ஆசிரியர்கள் அனைவரும் மேலைத்தேய வாத்திய இசையுடன் மண்டபத்திற்கு அழைத்து வரப்பட்டனர். மாணவி அனுசியா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் அஜித்குமாரின் வரவேற்பு நடனம் அனைவரையும் கவர்ந்தது. அரங்கில் மாணவர்களது கவிதை, பேச்சு, பாடல்கள் உள்ளிட்ட நிகழ்வுகளும் ஆசிரியரது நிகழ்வுகளும் சிறப்பாக அமைந்தன. சுதன் ஆசிரியரின் மேலைத்தேய நடனம் அனைவரது கண்ணுக்கும் விருந்தாக அமைந்தது. நிகழ்வில் மாணவர்களால் ஆசிரியர்களுக்கு நினைவுப்பரிசில்கள் வழங்கப்பட்டது. ஆசிரியர்கள் தினத்தையொட்டி துடுப்பாட்டம், கயிறிழுத்தல் போட்டிகள் ஏற்கனவே நடைபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.



த. கோசலை - தரம் 12 (கலை)

உலகில் எந்தப் பகுதியில் என்ன நடந்தாலும் உடனுக்குடன் அதை விரிவாக தெரிந்து கொள்ளக்கூடிய யுகத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். கடந்த சில ஆண்டுகளாக உலகையே கைகளில் வைத்திருக்கும் அளவில் சமூக வலைத்தளங்களான பேஸ்புக் (Facebook), டுவிட்டர் (Twitter), Blogger, கூகிள் + (Google +) போன்றன மிக முக்கிய பங்காற்றுகின்றன. இவற்றின் அபார வளர்ச்சிக்கு

## தப்புக் கணக்குப் போடவேண்டாம்

எல்லோரிடமும் கைபேசி எனப்படும் செல்போன் இருப்பதும் நடுத்தரவர்க்க வீடுகளில் இணையத்தள இணைப்புடன் கூடிய கணினிப் பயன்பாடு அதிகரித்தமையும் பிரதான காரணங்களாகும்.

இதன் காரணமாக எந்தவொரு விடயம் குறித்தும் தங்களுடைய கருத்து என்ன என்பதனை எளிதில் தெரிவிக்க எல்லோருக்கும் சந்தர்ப்பங்கள் கிடைப்பதோடு அனைவரும் தங்களது கருத்துக்களை பகிரவும் (Share) முடிகின்றது. இதனால் நம்முடைய வாழ்க்கை முறை எப்படி மாறிவிட்டது என்று நிபுணர் யாராவது ஆராய்ந்து தெரிவித்தால் சுவையாக இருக்குமல்லவா? நண்பர்களே நான் நிபுணர் அல்லன் எனினும் சமூக நிலையை ஆராய்வதற்கு தகுதிகள் கட்டாயமில்லையே. முதலில் சமூக வலைத்தளங்களால் ஏற்படுகின்ற நன்மையான விடயங்களைப் பற்றி சற்று எம் கண்பார்வையை திருப்பலாமா?

சமூக வலைத்தளங்களில் மிகவும் பிரபல்யம் பெற்றது பேஸ்புக் (Facebook) ஆகும். இதனை நமது தாய் மொழியில் "முகப்புத்தகம்" என அழைப்பர். முதலில் இதில் என்ன பிரிவுகள் (Options) காணப்படுகின்றது என பார்ப்போமானால் பதிவுப்பக்கம் (Profile), நிகழ்வுகள், (Events), குறுஞ்செய்தி/அரட்டை (Chat), பதிவுகள் (Note), விருப்பப்பக்கம் (Like page), போன்ற பல அம்சங்கள் உள்ளன. இதனூடாக நாம் எமது சொந்த கருத்துக்கள் (Comments), புகைப்படங்கள் (Photos), காணொளிகள் (Videos) போன்றவற்றை நண்பர்களுடன் பகிரமுடிவதுடன்; பிறரின் கருத்துக்கள், எண்ணங்கள் போன்றவற்றையும் பரிமாறமுடிகிறது. இதில் காணப்படும் Events என்ற பகுதியின் ஊடாக நண்பர்களின் பிறந்ததினங்கள் (Birthdays), ஏனைய நிகழ்வுகள் (Other events) என்பனவற்றை அறிய முடிகிறது. நண்பர்களே! நான் மேலே குறிப்பிட்ட விருப்பப் பக்கம் (Like Page) என்பது இணையத்தளம் போன்ற சாராம்ச அமைப்பையுடைய Facebook வடிவாகும். இதனூடாக பாடசாலைகள், நிறுவனங்கள், கழகங்கள், நகைச்சுவை போன்ற வற்றின் பக்கங்களாகவே பெரும்பாலும் அமைகின்றன. விரைவான செய்திப் பரிமாற்றம், ஒருங்கிணைவு, உறவுத்தொடர் போன்ற நன்மைகள் Facebook பாவனையால் கிடைக்கப்பெறுகின்றன. அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றின் அடிப்படையில் முகப்புத்தக பாவனையாளர்களில் 65% இற்கு அதிகமானோர் நகைச்சுவை, பக்கங்களை விரும்புவர்களாகவும் உள்ளனர். மேலும் சொல்லப்போனால் மேடிருக்கும் இடத்தில் பள்ளம் இருக்கும் என்பதுபோல் இதன் தீமைகளையும் சற்று ஆராயலாமா?

நீங்கள் பேஸ்புக் பிரியராக இருப்பீர்களானால் முதலில் உங்களிற்கு ஒரு sorry ! கூறிவிட்டு தொடங்கலாமே என நினைக்கின்றேன். ஏனெனில் நீங்கள் பேஸ்புக்கின் ஒரு பகுதியை மட்டுமே அறிந்து அதனை 100 % நேசிப்பவராக இருக்கலாம் அல்லவா அதனால்தான். இவ் முகப்புத்தகத்தினூடாக பாரியளவான சமூகச்சீர் கேடுகள் ஏற்படுகின்றன. இதில் பெரிய பங்காக காணப்படுவது அனைவரையும் கவிஞர்களாகவும் கற்பனை விண்ணர்களாகவும் மாற்றும் "காதல்". இது எப்படி ஏற்படுகின்றது என ஆராய்ந்தால் பேஸ்புக்கில் புகைப்படங்களை இடுவது பிரதானமானது. பின்னர் சொல்லவா வேணும்....... இதேபோன்று பாரியளவான சம்பவங்கள் காரணமாக அதிகளவில் பாடசாலை மாணவர்கள், சிறார்கள் போன்றவர்களே பாதிப்படைகின்றனர்.

அண்மையில் கூட யாழ்பகுதியில் மனதை உருக்கும் சம்பவங்கள் நடைபெற்றன. இதில் அதிகமாகப் பாதிப்படைவது பெண்களே என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. நான் கூறுவது பெண்களுக்கோ சிறார்களுக்கோ என்மீது

தொடர்ச்சி -9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஞ்ஞான வளர்ச்சியின் பயனாக இன்று உலகில் பல்வேறு புதிய புதிய ஊடக சாதனங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவை சமுதாயத்தைக் கோடிட்டுக் காட்டுவதற்குப் பெரிதும் துணைபுரிகின்றன. அத்தகைய சாதனங்களுள் ஒன்று திரைப்படம். இது ஒரு வெகுசனத் தொடர்புசாதனம். ஆரம்பகாலத்தில் வெறும் பிரசாரக் கருவியாகத் திரைப்படம் பயன்பட்டது. அதாவது வாழ்வின் புதிரை அவிழ்க்கும் விழிப்புணர்ச்சியின் வடிவமாகவோ அன்றேல் கலை வடிவமாகவோ தான் பயன்பட்டது.

எழுபதுகளில் தமிழ் சினிமாவில் புதியதோர் பாய்ச்சல் ஏற்பட்டது. பாரதிராஜா, பாலுமகேந்திரா, பாக்கியராஜா போன்றோர் இதற்குப் பெரிதும் துணைபுரிந்தனர். பின்னர் K.S. ரவிக்குமார், மணிரத்தினம், சங்கர், K.செல்வமணி, அகத்தியன், பார்த்தீபன், விக்ரமன் போன்றோரின் வருகை சினிமாவின் வலிமையை சமூகத்திற்கு உணர்த்தியது. கலை, கலைத்துறை சம்பந்தமான பார்வை அரசியல் பார்வையாக மாறத்தொடங்கியது. அரசியல்வாதிகள் தமது வாழ்வை சினிமாவாகவும் மக்கள் சினிமாவை தமது வாழ்வாகவும் ஆக்கிவிட்டனர்.

சினிமா ஒரு கலை. அது அற்புத அனுபவம் தரும் ஒரு ஊடகம். விழிப் புணர்வைத் தரும் ஒரு ஆயுதம். மக்களிடையே கலை, கலாசாரம் முதலியவற்றை வெளிப்படுத்த எழுந்த ஒரு வரப்பிரசாதம் என்றே மக்கள்




# திரைப்படங்களும் சமூகமும்

கருதினர். **"பாசமலர்"** சகோதர பாசத்தையும் **"சம்சாரம் அது மின்சாரம்"** குடும்பப் பிரச்சினைகளையும் என அவை ஏதோ ஒன்றைச் சொல்ல முனைந்தன. சமுதாயத்திற்கு பல நல்ல கருத்துக்களைத் தந்தன. **"தில்லானா மோகனாம்பாள்"** சிந்தனையை விட்டு அகலாத ஒரு திரைப்படம். நல்ல கலைக்குடும்பம் ஒன்றை அறிமுகம்செய்து கலையை ரசிக்கும் உணர்வை ஏற்படுத்த தூண்டுகோலாக அமைந்தது. **"பாகப்பிரிவினை"** ஒற்றுமையாக இருந்த குடும்பத்தில் ஏற்படும் பிளவுகள் பற்றிக்கூறுவதாக அமைந்துள்ளது.

மக்களுக்குச் சிறந்த பொழுதுபோக்கு அம்சமாகத் திகழ்ந்து, சோகத்தில் மூழ்கியிருக்கின்றவர்கள் தம் கவலையை மறந்து ஆனந்தத்தில் மிதக்க சினிமா ஒரு இதந்தரும் மருந்தாக அமைந்தது.

பள்ளிப் பருவத்தினர் முதல் முதியவர்கள் வரை அனைவரும் ஒரு பொழுதுபோக்கு சாதனம் சினிமாவே என்று கருதுகின்றனர். தொலைக்காட்சி, வானொலி என்பன அவர்களிடையே பிரபல்யம் பெறுவதற்கு இதுவே காரணம். தேசிய தொலைக்காட்சிகளில் கல்வி சம்பந்தமான போட்டிகள், சிறுவர்களுக்கான நிகழ்வுகள், செய்திகள் முதலியன ஒளிபரப்பப்படுகின்றன. அவற்றைப் பார்ப்பவர்கள், பயன்பெறுகின்றவர்களின் எண்ணிக்கையை விரல்விட்டு எண்ணலாம். மாணவர்களைப் பொறுத்தவரை படங்களில் வரும் நடிகர்கள், பாடல்கள், பாடகர்கள், பாடல்களை இயற்றியவர்கள், இசையமைத்தவர்கள் பெயர்களைத் தெளிவாக ஞாபகத்தில் வைத்திருக்கும் அளவிற்கு அவர்களின் சிந்தனைப்போக்கு மாறிவிட்டது. அந்தளவிற்கு சினிமாத்துறை மாணவ சமூகத்தில் பாதிப்புக்களை ஏற்படுத்தி வருகிறது எனலாம்.

இன்று வெளிவரும் படங்கள் வணிக நோக்கத்தில் தயாரிக்கப்படுகின்றன. பெரும்பாலானவை சமூக விரோதச் செயல்களை அவற்றிலிருந்து தப்பிக்கும் மார்க்கங்களை வெளிப்படுத்துகின்றன. இறுதியில் ஏதோ ஒரு முடிவை நோக்கிச் சென்றாலும் படம் முழுவதும் அபத்தம், கொலை, கொள்ளை, கற்பழிப்பு, பழிவாங்கும் நடவடிக்கைகள் மோசமாகச் சித்தரிக்கப்படுகின்றன. குடும்பத்துடன் மகிழ்ச்சியாக அமர்ந்து பார்க்கக்கூடியனவாக அமைய வில்லை. வன்முறை கலாசாரம் சமுதாயத்தில் பெருகிவருவது பெரும் சாபக்கேடு. ஒருவகையில் சினிமாவும் சமூகத்தைச் சீரழிக்கின்றது என்பதை மறுப்பதற்கில்லை. கருப்பொருள் எதுவும் இல்லாத படங்களைப் பார்க்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலை இன்று பெருகி வருகின்றது.

தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் படங்களைவிட இன்று சின்னத்திரை நாடகங்களின் தொகை நாளாந்தம் பெருகிய வண்ணம் உள்ளன. திரைப்படங்களே மேல் என்று கூறுமளவிற்கு அவற்றின் தரம் மேலும் கீழிறங்கிக் கொண்டு வருவது வேதனைதரும் விடயம். சிறந்த ஒரு கருப்பொருளை வைத்து திரைப்படங்கள் ஒளிபரப்பப்படுவதில்லை. வன்முறைக்கலாசாரம் உருவாவதற்கும், பாலியல்வல்லுறவுகள், பழிக்குப்பழிவாங்கும் மனோபாவங்கள் வளர்த்தெடுக்கப்படுவதற்கும் அவை பெருந்துணைபுரிகின்றன. கருணையின் இருப்பிடம், அன்பின் உறைவிடம், ஒழுக்கத்தின் பிறப்பிடம் என்று கூறப்படும் பெண்களே இன்று வக்ரபுத்தி கொண்டவர்களாக சித்திரிக்கும் போக்கை இத்திரைப்படங்கள் வெளிப்படுத்துகின்றன. இது வளர்ந்துவரும் சமுதாயம் சிறந்த ஒழுக்கமுள்ள சமுதாயமாக மலர்வதற்குப்பதிலாக சீர்கேடடையவே வழிவகுக்கின்றது.

இளைய தளபதி விஜய் நடித்த **" தலைவா"** படத்தை சில அரசியல் குழப்பம் காரணமாக சில நாட்கள் திரையுலகிற்கு வெளிவிடாமல் இருந்தார்கள். தனது விருப்பத்திற்குரிய நடிகர் விஜயினுடைய படம் வெளிவரவில்லையே என்ற ஆவேசத்தில் 17 வயது மதிக்கத்தக்க சிறுவன் ஒருவன் தற்கொலை செய்ய முயன்றான். யாழ்ப்பாணத்தில் அஜித்தின் **"ஆரம்பம்"** படத் துவக்க நிகழ்வில் அபிஷேகம் செய்தார்கள். இந்த அளவிற்கு வளரும் சந்ததிகள் மனதில், திரைப்படங்களும், கதாநாயகர்களும், இடம்பிடித்துள்ளனர். **"செவிடன் காதில் ஊதிய சங்கு போல"** பெற்றோர் கூறும் அறிவுரைகள் பிள்ளைகள் மனதில் பதிவதில்லை. நல்ல விடயங்கள் மெதுவாக, அமைதியாக வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது போல ஏற்றப்படவேண்டுமே அன்றி திணிக்க முடியாது. எனவே மக்கள் நலனைக் கருத்தில் கொண்டு திரைப்பட இயக்குனர்கள் செயற்படவேண்டும்.


தற்போது வெளிவரும் வெங்காயம், தங்கமீன்கள், மாற்றான், அழகர்சாமியின் குதிரை, 7ஆம் அறிவு போன்ற பல திரைப்படங்கள் பல நற்கருத்துக்களை எடுத்துக்கூறுவனவாக அமைகின்றன. எனவே இதுபோன்ற நல்ல பல விடயங்களை தயாரித்து இயக்குநர்கள் வெளியிடின் அது நமக்கும் நமது சந்ததிக்கும் மிகவும் பயனுடையதாக அமையும். சினிமாத்துறை ஆரம்பித்து பல வருடங்களாகிய நிலையில் இவை போன்ற பல திரைப்படங்களை உருவாக்கி சமுதாயத்திற்கு துணைசெய்ய இயக்குநர்கள் முன்வரவேண்டும்.

**யோகேஸ்வரன் யோதிகா**
2015 கணித பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறுதியுடன் முயன்றால் எண்ணியதைச் சாதிக்கலாம்





எமது கல்லூரியில் தரம் 10 இல் கல்வி கற்பவன் ஜெ.தயூட்சன். யுத்தம் இவனது வலது கையையும், வலது காலையும் தின்று விட்ட போதும் நம்பிக்கையை இழக்காது உறுதியின் குறியீடாய் திகழ்பவன். நாளை ஒரு பொறியியலாளனாய் நிமிரவேண்டும் எனும் கனவை நெஞ்சில் சுமந்து கொண்டு வாழ்வை எதிர் கொள்ளும் ஜெ.தயூட்சனுடன் ஒரு நேர்காணல்.)

**கேள்வி :-** உங்கள் குடும்பநிலை பற்றிக் கூறுங்கள்

**பதில்:-** நான் ஒரு சாதாரண குடும்பத்தில் பிறந்தேன். எனது தந்தை ஒரு ஆட்டோ ஓட்டுநர். தாய் தையல்வேலை செய்பவர். எனக்கு இரு அண்ணாமார்களும் ஒரு தங்கையும் உள்ளனர். இளைய அண்ணா தரம் 11 இலும் தங்கை தரம் 7 இலும் கல்வி கற்கின்றனர். யுத்தம் எனது அப்பாவின் உயிரைப் பறித்துவிட்டது. தற்பொழுது எனது மூத்த அண்ணாவினதும் அம்மாவினதும் அன்றாட உழைப்பிலேயே குடும்பம் இயங்குகிறது.



**த. டர்ஷிகன்**
பேட்டி கண்டவர்

**கேள்வி :-** உமக்கு எப்பொழுது பாதிப்பு ஏற்பட்டது? அப் பாதிப்பிலிருந்து எவ்வாறு மீண்டெழுந்தீர்?

**பதில் :-** நாங்கள் முள்ளிவாய்க்காலில் இருந்தவேளை எனக்கு பாதிப்பு ஏற்பட்டது. அவயவங்களை இழந்தபோது நான் இனி என்ன செய்யப்போகிறேன் என்னும் கேள்வி என்னை வாட்டியது. காயம் ஆறிய பிறகு மன்னாரில் உள்ள ஒரு பாடசாலையில் தற்காலிகமாக இணைக்கப்பட்டேன். மாணவர்கள் என்னுடன் அன்பாகப் பழகினர். கற்று உயரவேண்டும் என்ற நம்பிக்கையோடு கல்வியைத் தொடர்ந்தேன். சிறிது காலத்தில் மீண்டும் எனது கிளிநொச்சி மத்திய கல்லூரியில் இணைந்து கற்கும் சூழல் ஏற்பட்டது.

**கேள்வி:-** தற்போது நீங்கள் எவ்வகையான பிரச்சினைகளை எதிர்நோக்கு கின்றீர்கள்?

**பதில் :-** உள்ளத்தில் உறுதி உள்ளபோதும் சில பிரச்சினைகள் தொடர்ந்து கொண்டுதான் உள்ளன. வலதுகை இல்லாமையால் இடதுகையால் எழுதப் பழகினேன். தற்போது என்னால் இடதுகையின் துணைகொண்டு எழுத முடிகின்றபோதும் வலது கையால் எழுதியபோது இருந்த நேர்த்தியைப் பெறமுடியவில்லை என்ற வருத்தம் உண்டு. மேலும் கால்பாதிப்பினால் அண்ணா வுடனேயே பாடசாலைக்கு வருவேன். தனியார் கல்வி நிலையத்திற்கோ, வேறு தேவைகளுக்கோ தனியாகச் செல்வதில் சிரமத்தை எதிர்கொள்கிறேன்.

**கேள்வி :-** உங்களது பொழுதுபோக்குகள் பற்றி....

**பதில் :-** எனக்கு துடுப்பாட்டம், பூப்பந்து விளையாட்டுக்களில் மிகுந்த ஈடுபாடு இருந்தது. அண்மையில் கலை சார்ந்த கருத்தரங்கு கொழும்பில் நடைபெற்றபோது அதில் நானும் கலந்து கொள்ள முடிந்தது. அவர்கள் புகைப்படக்கருவி ஒன்றை வழங்கினர். தற்பொழுது புகைப்படம் எடுப்பதில் ஆர்வம் உள்ளது.

**கேள்வி :-** உங்கள் எதிர்கால இலட்சியம் என்ன?

**பதில் :-** எனக்கு கணித பாடத்தில் நிறைந்த ஈடுபாடு உண்டு. பொதுவாக 80 புள்ளிகளுக்கு மேல் பெற்றுவிடுவேன். எனது கனவெல்லாம் படித்து பொறியியலாளனாக வந்து சமூகத்திற்கு சேவை செய்யவேண்டுமென்பதேயாகும்.


**கேள்வி :-** மாணவர்களுக்கு என்ன கூற விரும்புகின்றீர்கள்?

**பதில் :-** வாழ்க்கையில் பிரச்சினைகள் வரும்போது சோர்ந்துவிடக்கூடாது. எதை இழந்தாலும் நம்பிக்கையை மட்டும் இழக்காது உறுதியுடன் முயன்றால் எண்ணியதைச் சாதிக்கலாம். எனவே மாணவர்களாகிய நாம் ஒழுக்கத்துடன் கல்வி கற்று உயரவேண்டும் என்பதைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

**கேள்வி :-** நிறைவாக உங்களுக்கு துணை நிற்பவர்கள் பற்றிச் சுருக்கமாகக் கூறுங்கள்.

பதில்:- எனது வளர்ச்சிக்கு துணை நிற்கும் எனது கல்லூரியை நன்றியுடன் நினைக்கிறேன். எனது நண்பர்கள். பொருளாதார ரீதியாக உதவும் அன்பு உள்ளங்கள். பாசமான என் குடும்பத்தினர் என அனைவருக்கும் எனது பணிவான நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். அனைவரது எதிர்பார்ப்பையும் நிறைவேற்றும் வகையில் கல்வியில் எனது திறமையை வெளிப்படுத்துவேன்.

## அங்கோர் வாட்



ஆசியாவிலுள்ள உலக அதிசயங்களுள் முக்கியமானது அங்கோர் வார்ட் கோவில். இது கம்போடியாவில் உள்ள அங்கோர் நகரில் அமைந்துள்ளது. 800 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டது அங்கோர்வார்ட். பன்னிரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த சூரியவர்மன் என்ற மன்னர் தான் இதைக் கட்டினார்.

அந்தக்காலத்தில் அங்கோர் முக்கிய தலைநகராக விளங்கியிருக்கின்றது. தலைநகருக்கு மேலும் சிறப்புச் சேர்க்கும் வகையில் சூரியவர்மன் இக்கோவிலை வடிவமைத்தார். இன்று அங்கோர்வார்ட் கோவில் கம்போடியாவின் தேசியக் கொடியிலும் இடம்பெற்றுள்ளது.

அங்கோர் என்றால் தலைநகர். வார்ட் என்றால் கோவில் என்று பொருள். இமயமலையில் உள்ள மேருமலையை மாதிரியாக வைத்து இது கட்டப்பட்டிருக்கின்றது. ஆரம்பத்தில் இந்துக்கடவுள் விஸ்ணுவுக்கான கோயிலாகத் தான் அங்கோர்வார்ட் இருந்தது. 14, 15 ஆம் நூற்றாண்டுகளில் இந்தக் கோயில் பௌத்தர் களின்கைக்கு மாறியது. பிறகு புத்தர்கோயிலானது.

செவ்வக வடிவில் கோவில் அமைந்துள்ளது. கோவிலைச் சுற்றிலும் அகன்ற அகழி இருக்கின்றது. எதிரிகள் கோவிலைத் தாக்காமல் அகழி காக்கின்றது. இந்த அகழித் தண்ணீரில் கோவிலின் வடிவம் அற்புதமாகத் தெரியும். அகழியைக் கடந்தவுடன் மரங்கள் அடர்ந்த பகுதிகள் உள்ளன. அதைக் கடந்தால் கோவில் இருக்கிறது. இந்தக் கோவிலுக்கு அருகில் சிறிய கோயில்களும் உள்ளன.

கம்போடியாவின் முக்கிய சுற்றுலாத்தளமாகத் திகழ்கின்றது. அங்கோர் வார்ட் கோவில் கம்போடியர்களின் கட்டடக்கலைக்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

ஆக்கம் - **யோகச்சந்திரன் யுசாந்தி**
தரம் 13 (கலைப்பிரிவு)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தீ விபத்து

தீ விபத்தால் கல்லூரியின் சமையற்கூடத்தின் பெரும்பகுதி பாதிப்புக்குள்ளாகியது.
தீயைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் சமூகத்தினர் ஈடுபட்டவேளையில்...

## இனிய நண்பி



தனிமை எனும் தீவில்
நான் தனித்து விடப்பட்ட போது
நட்பெனும் தேசத்திலிருந்து
நண்பியாய் படகில் வந்து
உறவென்னும் சமுத்திரத்தில்
என்னை உலவச் செய்து
பேரின்ப வெளியில் சிறகடிக்க வைத்தாய்.
வெறிகொண்ட யமன் வரவு
உயிர் கொண்ட நம் உறவை
ஒரு கணத்தில் பிரித்தது.

தோழியே!
பாசமாய் நீ தரும்
பச்சை மாங்காயும் உப்பும்
நாக்கிலே நீர் ஊற வைக்கும்
சேர்த்தே கண்ணீரும் கோலமிடும்
நெஞ்சறையில் பூட்டிவைத்த
உன் பாசமான நினைவுகள்
நித்தம் எனைக் குத்திக் கிழிக்கின்றன

தேடியும் கிடைக்காத பொக்கிஷமாய்
எதையும் தாங்கும் இதயம் வேண்டும் என்றாய்
என்னால் இதைத் தாங்க முடியவில்லை
இருப்பவைகளைப் பறித்துக் கொள்வதால்
இறைவா நீ பெறும் இன்பம் என்ன?

நட்பு வானில் சிறகடித்த எம்மை
திட்டம் போட்டு சிதைத்த
விதியே கேள்!
நானுள்ள வரை நம் நட்பு வாழும்
உண்மை அன்பும் நிலையாய் வாழும்.
(நட்பை இறைவனாலும் பிரிக்கமுடியாது)

நதுசாஜினி தரம் - 9



## சிரியுங்கள் சிந்தியுங்கள்

ஈழத்துத் தமிழ் அறிஞர்களில் கல்லடி வேலரும் ஒருவராவார். நகைச்சுவையுடன் நல்ல கருத்துக்களை மக்கள் மனதில் பதியவைக்கும் திறன் கொண்டவர் கல்லடி வேலன்.

கல்லடி வேலர் ஒருநாள் தன்னுடைய நண்பரான சுப்பையாப் புலவரின் வீட்டிற்குச் சென்றிருந்தார். கடும் வெயிலில் நடந்து களைத்து வந்திருந்த நண்பரைக் கண்டதும் சுப்பையாப்பிள்ளையும் அவரது மனைவியும் அன் போடு வரவேற்றார்கள். அவரது களைப்பைப் போக்கவல்ல உணவு ஒடியற்கூழ் என நன்கறிந்த சுப்பையாப்பிள்ளையின் மனைவி, பக்குவமாய் ஒடியற்கூழ் சமைத்தார். நண்பர்கள் இருவரையும் "கால், முகம் கழுவுங்கள்: உங்களுக்குப் பிடித்தமான ஒடியற்கூழ் சமைத்து வைத்திருக்கிறேன்" என்றார். கல்லடி வேலர் " அப்போ முக்கால் முகத்தை என்ன செய்யச் சொல்கிறீர்கள்" என்றாராம். நண்பருடைய சிலேடைக் கருத்துக்களை அறிந்து சுப்பையா குடும்பத்தினர் சிரித்துக் கொண்டே ஒடியற்கூழ் பரிமாறி மகிழ்ந்தார்கள்.

சி.சிலாசினி - தரம் - 9A

## இல்லமெய்வல்லுனர் திறனாய்வு - 2013



கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரி

27.02.2013 அன்று கல்லூரியின் வருடாந்த இல்லமெய்வல்லுனர் திறனாய்வுப் போட்டியில் கல்லூரியின் பழைய மாணவனும் பொறியியலாளருமான திரு.த.கடம்பசீலன் அவர்கள் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார். நிகழ்வில் கலந்துகொண்ட ஏனையவிருந்தினர்களும் மாணவரீது திறன் வெளிப்பாடுகளும்.

Our annual sports day held earlier this year was full of fun and an excitement. The entire school including the playground was decorated with flags colourful buntings and flowers. Many boys and girls took part in the event. Preparations for the events had started a week ago on the appointed day. Our principal formally declared the day open at 10 am. The games included foot ball , basket ball was matches, races, jumps, and 100 m race, and received a silver cup from my class.

The 100 m race which was very exciting, won by my friend monsoor. My other friend Rajat, secured the first position in the long jump. But my classmate Anish fell and injured himself during the race.

The event came to an end with the distribution of prizes which were given away by our principal the following day was declared holiday by our principal

Thank you

**A.Varnan** - Grade-7c



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**5ம் பக்க தொடர்ச்சி**

கோபத்தை ஏற்படுத்தலாம். எனினும் இன்றைய சமூகநிலைப்படி பெண்களோ, சிறார்களோ பேஸ்புக் பாவனையை குறைப்பது சாலச்சிறந்ததாகும். தெரியாத நபர்களிடம் இருந்து வரும் நட்பு வேண்டுகைகள் (friend request) தவிர்ப்பது நல்லது. இதில் பெற்றோரும் கூடிய கவனம் செலுத்துவது காலத்தின் கட்டாயம். சில நாடுகளில் 18 + க்கு மேற்பட்டவர்களே சமூக வலைத்தளங்களை பாவிக்கலாம் என்ற சட்டம் இருக்கிறது. இச்சட்டம் எமது நாட்டில் இல்லாதது கவலைக்குரிய விடயமாகும். இது குறித்து சமூக ஆர்வலர்கள் கூடிய கவனம் செலுத்தவேண்டும் என வேண்டி நிற்கின்றேன்.

சரி நண்பர்களே அண்மையில் பேஸ்புக்கின் ஆரம்பகர்த்தாவின் Profile தகர்க்கப்பட்டது நீங்கள் அறிந்ததொன்றே. Profile ஐ இயலுமானவரை பாதுகாப்பதற்கான சில உத்திகள்.

1. உங்கள் கடவுச் சொல்லை (Password) எண்கள், குறிகள் கொண்டவையாகவும் இயலுமானவரை பெண்களின் பெயர்கள் அற்றனவாகவும் அமையுங்கள்.
2. தெரியாத நட்பு வேண்டுகோள்களை ஏற்கவேண்டாம்.
3. உங்கள் பயனர் சொல் (User Name) இல் தயவுசெய்து தொலைபேசி எண்களை வழங்கவேண்டாம்.
4. முகப்புத்தக கரையோரங்களில் காணப்படும் விளம்பரங்களை கிளிக் (Click) செய்ய வேண்டாம்.
5. பேஸ்புக்கில் முகப்பில் (Wall), Photos, Videos இடும்போது அதனை public ஆக பகிர (Share) வேண்டாம்.
6. கடவுச் சொல்லையும், முகப்பு படத்தையும் குறைந்தது 3 மாதத்திற்கு ஒரு தடவையாவது மாற்றம் செய்க.

சரி நண்பர்களே வாழ்க்கையில் இன்பமும் துன்பமும் வருவது போல இதிலும் நன்மையும் தீமையும் வருவது ஒரு படத்தில் வரும் நகைச்சுவையைப் போல "இதெல்லாம் சகஜமப்பா" என்று விட்டுவிடாதீர்கள். இது வாழ்க்கை என்பதை மறந்து விடாதீர்கள். இதில் தீயவைதான் அதிகம். தற்போது உலகத்தின் அனைத்து செயற்பாடுகளிலுமே இணையம் பொறிதட்டிக் கொண்டிருக்கிறது. இதனை பொறுமையோடு வாசித்துக் கொண்டிருக்கும் என் இனிய தோழர் தோழிகளே, பெரியோரே, பெற்றோரே எதிர்காலத்தில் உலகம் இணையத்தின் கையில் என்பதால் இணையம் சார்ந்த விடயங்களை நல்ல நோக்கோடு தேடியறிய முயலுங்கள். வெற்றி உங்கள் கையில் என்ற நம்பிக்கையுடன்......

**சு.டிவாஸ்கர்**
தரம் 12 (கணிதபிரிவு)

## வாணிவிழா



வாணி விழாவானது இந்து மன்றத்தினரால் சிறப்பாக ஒழுங்கு செய்யப்பட்டு நடைபெற்றது. 10.10.2013 காலை 9.30 மணிக்கு நிகழ்வு ஆரம்பமானது. பேச்சு, பாடல், நடனம், நாடகம், விவாதம், உள்ளிட்ட நிகழ்வுகள் நடைபெற்றன. போட்டியில் கலந்துகொண்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வும் நடைபெற்றன.

## தமிழறிவு விநாடி வினாப் போட்டி




2013 தேசிய மட்டத் தமிழ்த்தினம் தமிழறிவு விநாடி வினாப் போட்டியில் பங்குபற்றி முதலாம் இடத்தைப் பெற்று கல்லூரியின் முத்திரையினை தேசிய அரங்கில் பதித்த மாணவிகளான ப.விதுசா, க.கீர்த்திகா, அ.சுவேதா, ஜே.தர்சிகா, சி.சாருஜா

* 2013 தமிழ்த்தினப் போட்டியில் பிரிவு IV கட்டுரை வரைதல் இலக்கியம் நயத்தல் போட்டியில் மு.டிலோஜன் மாகாண மட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்றார்.



## தொழில்நுட்பப் பிரிவு

க.பொ.த உ/த பிரிவில் தொழில்நுட்பப் பிரிவை ஏற்படுத்தும் வகையில் கிளிநொச்சி கல்வி வலயத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ள இரு பாடசாலைகளில் எமது கல்லூரியும் ஒன்றாகும். 15.07.2013 அன்று தொழில்நுட்ப ஆய்வு கூடத்திற்கான அங்குரார்ப்பண நிகழ்வு நடைபெற்றது. கௌரவ மு.சந்தரகுமார் (பா.உ) அவர்கள் பிரதம விருந்தினராகவும், கிளிநொச்சி அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன், கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் ஆகியோர் சிறப்பு அதிதிகளாகக் கலந்து கொண்டனர். அன்று தொழில்நுட்பப் பிரிவு தொடர்பான அறிவுறுத்தல் கருத்தரங்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.



புதிதாக அமைக்கப்பட்டுள்ள கூடைப்பந்தாட்ட மைதானம்

## ஓவியப் போட்டி

கிளிநொச்சி வலயக் கல்வி அனுசரணையுடன் இராணுவத்தினர் இணைந்து நடாத்திய சித்திரக் கண்காட்சி மற்றும் ஓவியப் போட்டியில் பங்குபற்றி பரிசில்களை வென்ற மாணவர்கள்.



| | | |
|---|---|---|
| வி.திலக்க்ஷன் | - | 7500/- |
| பொ.விதுசன் | - | 7500/- |
| த.கோசலை | - | 2500/- |
| தி.தனுசன் | - | 2500/- |
| த.நிக்ஷாந் | - | 2500/- |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2013 நிகழ்வுகளின் நிழல்கள் சில...



மாணவ முதல்வர்களுக்கான சின்னஞ்சூட்டும் நிகழ்வு



ஆசிரியர் தினத்தையொட்டி நடாத்தப்பட்ட மென்பந்து போட்டி



கல்விச் சுற்றுலா



மாகாண மட்ட கணித ஒலிம்பியாட் போட்டி



பேடன் பவுல் தினம்



கொழும்பு தமிழ்ச்சங்கம் நடாத்திய விவாதப் போட்டியில் 3ம் இடத்தையும், மொரட்டுவ பல்கலைக்கழகம் நடாத்திய போட்டியில் 4ம் இடத்தையும் பெற்ற மாணவர்கள்



பொதுநலவாய மாநாட்டை முன்னிட்டு கிளிநொச்சியில் நடந்த நிகழ்வில் Bahamas நாட்டு தேசியகீதத்தை இசைத்த மாணவர்கள், பயிற்றுவித்த ஆசிரியர்




மாணவ விடுதி திறப்பு விழா




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தைப்பொங்கல் விழா



புதிதாக அமைக்கப்பட்டுள்ள கணனி ஆய்வுகூடம்




நாடகப்பயிற்சிப் பட்டறை



பாடசாலையில் பெற்றோர் மேற்கொண்ட சிரமதான நிகழ்வு




தூரிகைக் கண்காட்சி



கல்விச் சுற்றுலா



மாணவர்கள் மேற்கொண்ட சிரமதானப்பணி



தேசியமட்ட மரதனோட்டப்போட்டி வெற்றியாளர் கௌரவிப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த உயர்தரம் 2012 பரீட்சைப் பெறுபேறுகள்

**கணிதம்**

| | | |
|---|---|---|
| அ.ஆருத்திரன் | - 3A | (மாவட்டம் -01) |
| அ.நிரோஜன் | - 3A | (மாவட்டம் 02) |
| ச.ரகுராம் | - 3A | (மாவட்டம் 03) |
| ச.கணேஸ் | - A2B | (மாவட்டம் 04) |
| சு.கௌசிகன் | - ABC | (மாவட்டம் 05) |

**உயிரியல்**

| | | |
|---|---|---|
| ம.பகீரதன் | - A2B | ( மாவட்டம் -02) |
| ச.தேவப்பிரியன் | - A2B | ( மாவட்டம் -03) |
| ஜெ.ஜெனாறொசிங்ரன் - | | (மாவட்டம் -04) |
| ஜோ.அகில்மாறன் | - 2BC | (மாவட்டம் - 07) |
| தி.நீரஜா | - 3C | ( மாவட்டம்- 10) |

3A சித்திபெற்றவர்கள்

**வர்த்தகம்**


| | | |
|---|---|---|
| அ.அசிந்தா | - 3A | (மாவட்டம் - 10) |
| பா.பாஸ்கரன் | - 2AB | (மாவட்டம் -16) |
| ச.கவிதா | - 2AB | (மாவட்டம்- 17) |
| ரா.மயூரன் | - A2B | (மாவட்டம் - 23) |
| சி.சாரூபன் | - 2AB | (மாவட்டம் - 25) |

**கலை**

| | | |
|---|---|---|
| இ.அனுஷ்கா | - ABC | (மாவட்டம் -02) |
| ரா.பானுமதி | - A2B | ( மாவட்டம் - 04) |
| கி.அனுஜா | - A2B | ( மாவட்டம் - 05) |



## அழகாய் எழும் கட்டடம்



மகிழ்ச்சிகரமான கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டை வலுப்படுத்தும் வகையில் கல்லூரியில் அமைக்கப்பட்டுவரும் நீண்ட தொடர்மாடிக் கட்டடத்தொகுதி......

## பரதநாட்டியம்

07.07.2013 அன்று கிளிநொச்சி தமிழ்ச்சங்கம் நடாத்திய பரத நாட்டியப் போட்டியில் எமது கல்லூரி அணியினர் 1 ஆம் இடத்தினைப் பெற்றனர். நிகழ்வில் பங்குபற்றிய மாணவர்கள். பா.சிந்துஜா கேசல்யா தனோசா கயல்விழி யென்சி டிலக்சனா டயற்றா கனி ராமேரி





## பொது அறிவுப்போட்டி

பொதுஅறிவுப் போட்டி மத்திய வங்கியின் அனுசரணையுடன் நடாத்தப்பட்ட பொதுஅறிவுப் போட்டியில் எமது கல்லூரி மாணவர்கள் மாவட்ட மட்டத்தில் 1 ஆம் இடத்தினைப் பெற்றுக்கொண்டனர்.

வீ.சுஜீதா / மு.கயல்விழி / அ.சண்சீவன்

### சைவப்புலவர் சங்கம் நடாத்திய விநாடி வினாப் போட்டியில்

| | |
|---|---|
| மு.நித்தியமலர் | 1ம் இடம் |
| செ.விக்ஷாளினி | 3ம் இடம் |
| தி.மதிக்ஷா | 5ம் இடம் பெற்றுக் கொண்டனர். |

**சைவபரிபாலன சபையினர் தேசிய ரீதியாக நடாத்திய இந்துநாகரிகம், இந்துசமயம் பரீட்சையில் வெற்றிபெற்ற மாணவர்கள்**

| | | |
|---|---|---|
| க.கீர்த்திகா | 1ம் இடம் | 5000/- |
| பி.அலக்சியா | 1ம் இடம் | 5000/- |

**ஆறுமுகநாவலர் கட்டுரைப் போட்டியில்**

| | | |
|---|---|---|
| யோ. யுசாந்தி | 2ம் இடம் | 2000/- |

**வணிகப் போட்டியில் பங்குபற்றி மாவட்ட மட்டத்தில் வெற்றி பெற்றோர்.**

| | |
|---|---|
| நா.கேசராஜ் | 1ம் இடம் |
| மு.கயல்விழி | 1ம் .இடம் |

# உலக ஆசிரியர் தினம் - 2013

## கிளி/கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம்



**கண்ணிற்கு இமைகள் போல எமைக் காத்து**
**ஜொலிக்கும் வைரம் போல எமைத் தீட்டி**
**ஆற்றொணா துன்பத்திலும் அன்புடன் உரையாடி**
**நிழல் தரும் விருட்சங்களாய் எம் மனதில் வேரூன்றும்**
**எம் நினைவில் நீங்கா ஆசிரியர்களை வாழ்த்துகின்றோம்**
**அன்புடன் மாணவர்கள்.**

## மடை




**2013** ஆம் ஆண்டிற்கான பாரம்பரிய கலைகளின் திருவிழா எனும் நிகழ்வானது ஒக்டோபர் 25.26.27 ஆம் திகதிகளில் சிவானந்த தபோவனம். உப்புவெளி வீதி. திருகோணமலையில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டு நடந்தேறியது. இந்நிகழ்வுகள் தொடர்பான பதிவுகளைத் தொகுத்து மடை எனும் இதழ் வெளியிடப்பட்டுள்ளது. இவ்விதழ் பாரம்பரிய தமிழருடைய பண்பாட்டை மையப்படுத்தியும் மாற்றங்களை உள்ளடக்கியும் பறங்கியர் இசைநடனம். தப்பு இசைக்கலை. மகுடிக்கூத்து. முஸ்லிம் பாரம்பரிய நிகழ்த்துகை. தோரணம் களரியும் பறங்கியர் சமூக பாரம்பரிய இசை. நடன நிகழ்வுகள் கலைகளின் விவரணங்கள் சிறுகுறிப்புக்களாக உள்ளன. நிகழ்வில் கலந்துகொண்ட வன்னி உள்ளிட்ட துறைசார் கலைஞர்களின் விபரக்குறிப்பு இணைக்கப்பட்டுள்ளமை மற்றுமொரு சிறப்பம்சமாகும்.

**தனோஷா விக்னேஸ்வரன்**
12 A கலைப்பிரிவு

Printed at: ANDRA Printers, No. 356A, Kasthuriyar Road, Jaffna. 021-2217279

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org